# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

**O.S.96/2021**
**CNR.No.TNCB19000**

Date: 08.07.2025 PW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | வேலுச்சாமி | **வயது** | 59 |
| **த/பெ** | பழனிச்சாமி | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| **விலாசம்** | காளியப்பனூர் தேக்கம்பட்டி | **மாவட்டம்** | கோயமுத்தூர் |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 8th July 2025

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

தாவா சொத்தின் அயிட்டம் 2-ல் 50 செண்டிற்காக வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். தாவா 2-ம் அயிட்ட சொத்து எப்படி வந்தது என்றால் எனது அம்மாவிற்கு எனது மாமா பாகம் பிரித்து கொடுக்கப்பட்ட வகையில் வந்தது. வா.சா. ஆ. 3 ன் படி வந்தது. க.ச.எண் 168/3 க்கும் தாவா 2ம் அயிட்ட சொத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லையென்றால் சரியல்ல. வா.சா.ஆ 3 பாக பத்திரத்தில் க.ச.எண்.168/3 குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அது விடுபட்டுள்ளது. தாவா 1-வது அயிட்டம் தொடர்பான வா.சா. ஆ 2 ஆவணத்திலும் க.ச.எண்.168/3 விடுபட்டுள்ளது என்றால் சரிதான். தாவா இரண்டு அயிட்ட சொத்துக்களிலும் தேக்கம்பட்டி - காரமடை ரோட்டிற்கு தெற்கு என்று எல்லை காண்பிக்கப்பட்டுள்ளது தவறானது என்றால் பத்திரப்படி தவறு. நான் பிராதில் அவ்வாறாக சொல்லி உள்ள எல்லை தவறானது என்றால் நான்கு எல்லையை பொறுத்து சரி.

இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தாவா சொத்தை அளந்து எல்லைகளை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். பிராதில் சொல்லியிருக்கிற சொத்துக்களுக்கு நாங்கள் நால்வரும்தான் உரிமையாளர் என்று விளம்புகை பரிகாரம் கோரி சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். பத்திரங்களில் விடுபட்டுபோன க.ச.எண்.168/3 எப்போது தெரிந்தது என்றால் 1991ல் தெரிந்தது. இன்றுவரை அந்த பத்திரங்களை திருத்தம் செய்ய நான் எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எப்போது முயற்சி எடுத்தேன் என்றால் நான் முயற்சி

எடுக்கவில்லை. க.ச.எண்.168/3 ல் எங்களுக்கு எந்தவிதமான உரிமையும் இல்லாததால் பத்திரங்களை திருத்தம் செய்ய முயற்சி எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

வா.சா. ஆ 3 பாகப்பத்திரத்தில் எனது தாய்மாமா எம். பழனிச்சாமியும் 1ம் வாதியான எனது தாயாருக்கும் சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் கண்டுள்ள பொன்னம்மாளுக்கும் சாவித்திரிக்கும் சொத்துக்கள் ஒதுக்கப்படவில்லை என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் ஏ செட்யூல் பாகம் 5 ஏக்கரா 39 செண்ட் எனது தாய்மாமா பழனிச்சாமிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அதில் எனது தாயாருக்கு 50 செண்ட் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ 3 தேதியிலேயே அவரவர்கள் பாகத்தை எடுத்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். அதில் கண்டுள்ள எனது தாய்மாமாவின் 5 ஏக்கர் 39 செண்ட் தான் வா.சா- ஆ 6, 7 மற்றும் 8 ன்படி பிரதிவாதி ராஜாமணிக்கு விற்கப்பட்டது என்றால் சரிதான்.

ராஜாமணி சொத்தை வாங்கியதிலிருந்து அவருடைய சுவாதீனத்திலும் அனுபவத்திலும் இருந்து வருகிறார் என்றால் அந்தளவிற்கு பூமி இல்லை. ஆரம்பத்தில் பிரதிவாதி கிரையம் வாங்கும்போது அவரது பத்திரத்தில் க.ச.எண்.168/3 விடுபட்டு போனது என்றால் சரிதான். பின்னிட்டு பிரதிவாதி திருத்தம் செய்து சரிசெய்து கொண்டார் என்றால் என்னுடைய பூமியை சேர்த்து திருத்தம் செய்து கொண்டார். அவர் திருத்தம் செய்த தேதியிலேயே என்ன செய்துள்ளார் என்று பத்திரத்தை பார்த்து தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். அதனால் அந்த பத்திரம் செல்லாது என்று இன்றுவரை வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL

Digitally signed by K PALANIVEL
Date: 2025.07.08 19:03:36 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.